

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் தமிழ்நாடு அரசின் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பில் தமிழ்நாடு அரசின் மானியக் கோரிக்கை நடை பெறவுள்ளதையொட்டி நேற்று (8.4.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் உள்ளார்.






### தமிழ்நாட்டின் பெருமையை தொடர்ந்து பாதுகாத்து வரும்

# தமிழ்நாடு முதல்வருக்கு - சட்டப்பேரவையின் சார்பில் நன்றி!

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு உரை!

**சென்னை, ஏப். 9 –**

**தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவியின் செயல்பாடுகள் அனைத்தும் சட்ட விரோதம் என, நேற்று உச்சநீதிமன்றம் வரலாற்றுப் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியதையடுத்து சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின் நிறைவாகப் பேசிய பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள், ''தமிழ்நாட்டின் பெருமையை தொடர்ந்து பாதுகாத்து வரும் முதல்வருக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.**



இது குறித்து பேரவைத் தலைவர் அவர்கள் கூறியதாவது:-

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றம், பல சாதனைகளைப் படைத்தது, அனைவரும் அறிந்தது. முதன்முதலாக இந்தியாவிலேயே 1921 ஆம் ஆண்டில் தான், இதே மாமன்றம் தான், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுத்தது. மறைந்த தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில், இந்த மாமன்றம் தான் "தமிழ்நாடு" என்று பெயர்வைத்துக்கொடுத்தது. மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் தான், பெண்களுக்கு சொத்தில் சம பங்கு உண்டு, குடிநீர் வடிகால் வாரியம் போன்ற பல சாதனைகளை நிகழ்த்தியிருந்தாலும், இன்றைய முதல்வர் அவர்களது அரசு தான், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அனைத்தையும் அரசியல் சட்டத்திற்குட்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கின்ற நோக்கத்தோடு, அனைத்துப் பணிகளையும் செய்து வந்தது. அதனுடைய தொடர்ச்சியாகத் தான், இன்று உச்ச நீதிமன்றம் இவ்வளவு பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கின்றது. ஏற்கெனவே, அனைவரும் சொன்னது போன்று, ஒரு ஆளுநர், ஒரு அமைச்சரவை எழுதிக் கொடுப்பதை மட்டும்தான் சட்டமன்றப் பேரவையில் வாசிக்கின்ற உரிமை உண்டு என்பதை இந்த சட்டமன்றத்தில்தான், நம்முடைய முதல்வர் அவர்கள்தான் இந்தியாவிற்கே வழிகாட்டினார்கள்.(மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல்தான், இப்போதும், ஒரு சட்டம், சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அதன் அனுமதிக்காக ஆளுநருக்குச் சென்று, அவர் திருப்பி அனுப்பினால், மீண்டும் அதை நிறைவேற்றிக் கொடுத்தால், அதை ஆளுநர் தடையின்றி உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் நீதியைப் பெற்றுத் தந்த முதலமைச்சர் அவர்களை இப்பேரவையின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பேரவை சார்பாக, இந்தப் பேரவையில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்தப் பெருமை சேர்ந்திருக்கிறது. இந்தநேரத்தில் நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். இப்போது இரண்டாவது முறையாக சட்டமன்றத்தில் நிறைவேற்றிக் கொடுத்த தீர்மானத்தில், நாகப்பட்டினத்தில் இயங்கி வருகின்ற மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு அம்மையார் ஜெயலலிதா அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று உங்களுடைய ஆட்சிக் காலத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு கிடப்பில் கிடந்தது. இதே சட்டமன்றத்தில் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு அம்மையார் ஜெயலலிதா அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று மீண்டும் இரண்டாவது முறையாக தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியது இன்றைய முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நன்றி சொல்வதற்கு தயக்கம் காட்டுவதுதான் வேதனையான விஷயமாக இருக்கிறது என்பதை மட்டும் கூறி, இந்த அளவில் முதல்வர் அவர்களின் எண்ணமும், சிந்தனையும் 24 மணிநேரமும் தன்னுடைய கட்சி என்றும், தான் என்றும் இல்லாமல் இந்த சமூகத்திற்காக, தமிழ்நாட்டிற்காக உழைத்து, தமிழகத்தினுடைய பெருமையைத் தொடர்ந்து பாதுகாத்து வருகின்ற முதல்வர் அவர்களுக்கு இந்த சபை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு பேரவைத் தலைவர்அவர்கள் உரையாற்றினார்.


தி.மு.க.
இளைஞர் அணி
கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்
புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சென்னை வடக்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 09.04.2025 புதன்கிழமை | மாலை 4.00 மணி | சென்னை வடக்கு | அறிவகம் திருமண மாளிகை, இராயபுரம். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |
| 10.04.2025 வியாழக்கிழமை | மாலை 4.00 மணி | ஈரோடு வடக்கு | இராமாயம்மாள் திருமண மண்டபம், கோபிச்செட்டிபாளையம். |
| 12.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் கிழக்கு | தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கழக அலுவலகம், வாழப்பாடி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 06-04-2025


### நேர்மையான, நியாயமான பாதை வெற்றியைப் பெற்றுத் தரும் என்பதில் உறுதிகொண்டவர் நம் முதலமைச்சர்!

# தமிழ்நாட்டை மேலும் தலைநிமிரச் செய்திருக்கிறார்!

## தமிழ்நாட்டு மக்கள் சார்பில் நன்றி! பேரவையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

**சென்னை, ஏப். 9 –**

**உச்சநீதிமன்றத் தீர்ப்பை அடுத்து சட்டப்பேரவையில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ''தமிழ்நாட்டை மேலும் தலைநிமிரச் செய்திருக்கிறார், நமது முதல்வர் அவர்கள்!'' என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே சட்டப் போராட்டம் நடத்தி பெற்றுத் தந்திருக்கின்ற அந்த வரலாற்றுத் தீர்ப்பு என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டும் பெருமையினைப் பெற்றுத் தருகின்ற தீர்ப்பு அல்ல; அகில இந்திய அரசியலுக்கும், அரசியல்வாதிகளுக்கும், இந்தியாவிலே இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களுக்கும் சிறப்புச் சேர்க்கின்ற வகையிலே அவர்கள் பெற்றுத் தந்திருக்கிற தீர்ப்பு என்பது யாராலும் மறுக்கமுடியாத ஒரு தீர்ப்பு ஆகும்.

முதலமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிற அந்த தீர்ப்பு களிலே ஒருசில வற்றை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். சட்டப்பேரவையிலே இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய 10 மசோதாக்களுக்கு ஆளுநர் அன்றையதினமே ஒப்புதல் தந்திருக்க வேண்டும் என்கிற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற முடிவிற்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய வெற்றி.



**நீதிமன்றத்தில் ஒலித்த நமது குரல்!**

அடுத்ததாகச் சொல்லப் போவோமேயானால், "தமிழ்நாடு அரசு இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய அந்த 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பியது செல்லாது" என்று உச்ச நீதிமன்றம் அடித்துச் சொல்லி இருக்கின்றது. இதுவும் நம்முடைய குரல் இன்றைக்கு நீதிமன்றத்திலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற எதிர்க்கட்சி ஆளுகின்ற மாநிலங்களுக்கெல்லாம் குரல் கொடுக்கக் கூடிய ஒரு முதலமைச்சர். இன்றைக்கு அகில இந்தியத் தலைவர் என்பதை இந்த வரலாற்றுச்சிறப்புமிக்க தீர்ப்பின் மூலமாக அவர்கள் நிருபித்திருக்கின்றார் கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவதாக சொல்லப்போவோமேயானால் "ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களின் செயல்பாடுகள் நேர்மையானதாக இல்லை" என்று உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது; நாங்கள் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, "மாநில அரசுக்கு ஆளுநர் வீண் தடைகளை ஏற்படுத்தக்கூடாது, அது மக்கள் நலன்களைப் பாதிக்கும்" என்று நாங்கள் சொல்லவில்லை; உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது.

**கண்டனம்!**

அடுத்ததாகச் சொல்லப் போவோமேயானால் "உயர் அதிகாரத்திலே இருப்பவர்கள் அரசியல் சாசனத்தின் முக்கிய அம்சங்களைப் பின்பற்ற வேண்டும் என்று ஆளுநருக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இதிலிருந்து முதலமைச்சர் அவர்கள் என்றைக்குமே சட்டத்தின்மீது நம்பிக்கை உள்ளவர்கள். தனக்கு சட்டப் போராட்டம் என்றைக்கும் வெற்றியைத் தரும். ஏன் என்று சொன்னால், தான் செல்கின்ற பாதை நியாயமான, நேர்மையான பாதை. அந்த நேர்மையான, நியாயமான பாதை தனக்கு வெற்றியைப் பெற்றுத்தரும் என்பதிலே உறுதியாக உள்ளவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். எனவே தான், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை இன்றைக்கு நமக்கு அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். இதனால் இன்றைக்கு தமிழ்நாட்டை தலைநிமிரச் செய்திருக்கிற முதலமைச்சர் என்கிற பெருமையை தமிழ்நாட்டிற்குப் பெற்றுத் தந்திருக்கிற அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரினுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி குறிப்பிட்டார்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 48வது நாள்!

## திரு.வி.க. நகர் தெற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப். 9-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 48வது நாள் திரு. வி.க.நகர் தெற்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 48 ஆம் நாளான





- கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (08.4.2025) திரு.வி.க நகர் தெற்கு பகுதி- இடம்: 1) வட்டம் 75 - சிவ காமிபுரம் பராக்கா ரோடு, சென்னை. 2) வட்டம் 75 அ - சின்னபாபு ஐந்தாவது தெரு சந்திப்பு, நம்மாழ்வார் பேட்டை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, பி. ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ். சசிகுமார், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம். தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜய குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.


